MAALAI MALAR

DATE : 23.11.2023

PAGE NO : 03



பல்கலைக்கழகத்தின் புதிய கட்டிடங்களை துணைவேந்தர் குர்மீத்சிங் திறந்து வைத்த காட்சி.

# புதுவை பல்கலைக்கழகத்தில் 9 புதிய கல்வி கட்டிடங்கள்

## துணைவேந்தர் குர்மீத்சிங் திறந்து வைத்தார்

புதுச்சேரி,நவ.23—

புதுவை பல்கலைக் கழகத்தில் உயிரி தொழில்நுட்பம், அரசியல் சர்வதேச ஆய்வுகள், உடற்கல்வி, விளையாட்டு, வரலாறு, ஆங்கிலம், கணிணி அறிவியல் துறைகளுக்கு 6 புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

**புதிய கட்டிடங்கள்**

மேலும் சுபாஷ் சந்திரபோஸ் ஆண்கள் விடுதி, கண்ணகி பெண்கள் விடுதி, பிர்சா முண்டா ஆண்கள் விடுதி என 3 விடுதிகள் கட்டப்பட்டுள்ளது.

இந்த 9 கட்டிடங்களையும் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் திறந்து வைத்தார்.

விழாவில் பேராசிரியர்கள் தரணிக்கரசு, ராஜீவ் ஜெயின், ரஜ்னீஷ்பூடானி, லாசர், சதானந்தஜிசுவாமி, விஜயகுமார், நந்தகிஷோர், புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

DINAMANI

PAGE NO: 04 DATE: 23.11.2023

# புதுவை பல்கலை.யில் தேசிய கருத்தரங்கு

புதுச்சேரி, நவ.22: புதுவை பல்கலைக்கழகத்தில் 'வள்ளலாரின் படைப்புகளும் பணிகளும்' என்னும் தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி, இலக்கியப் புலமும், புதுச்சேரி மண்டல இந்திராகாந்தி தேசிய கலை மையமும் இணைந்து நடத்திய இந்தக் கருத்தரங்கை பல்கலைக்கழக இயக்குநர் (கல்வி) க. தரணிக்கரசு தலைமை வகித்து தொடங்கிவைத்தார். தமிழியற்புல இயக்குநர் நளினி ஜே. தம்பி வாழ்த்திப் பேசினார். புதுவை அருங்காட்சியக இயக்குநர் அறிவன், வள்ளலார் கோட்பாடு என்னும் தலைப்பில் பேசினார்.

வள்ளலாரின் படைப்புகளும் பணிகளும் என்ற பொருண்மையிலான ஆய்வுக் கருத்தரங்கம் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. இதில் பா.பட்டம்மாள், வேல்.கார்த்திகேயன் உள்ளிட்ட 10 பேராசிரியர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர்.

நிகழ்ச்சிகளை வ. தனலட்சுமி தொகுத்தளித்தார். இந்திராகாந்தி தேசிய கலை மைய மண்டலத் தலைவர் ஜெ. கோபால் வரவேற்றார். பேராசிரியை அ. லட்சுமி தத்தை நன்றி கூறினார். புரவலர் ஜெயமூர்த்தி, பேராசிரியர் கே. பழனிவேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.